**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.95** **நாள் : 16.07.2019**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் மணலி மண்டலம் முதல் குப்பையில்லா மண்டலமாக மாற்றப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், 42.33 சதுர கி.மீ. பரப்பளவில் 7 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். பெருநகர சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின் போது மணலி, மாத்தூர், வடபெரும்பாக்கம், ஆண்டார்குப்பம், கடப்பாக்கம், சடையங்குப்பம், இடையஞ்சாவடி மற்றும் மணலி புதுநகர் ஆகிய நகராட்சி மற்றும் ஊராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது. இம்மண்டலத்தில் சுமார் 40 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வந்தது.

2015ம் ஆண்டுக்கு முன்பு ஆரம்பக் காலங்களில் மணலி மண்டலத்தில் 251 காம்பேக்டர் குப்பைத் தொட்டிகள் மூலமாக குப்பைகள் சேகரிக்கப்பட்டு அருகில் உள்ள காலி இடத்தில் கொட்டப்பட்டு வந்தது. 2015ல் முதன் முதலில் வார்டு–20ல் குப்பையை தரம் பிரித்து சேகரிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. படிப்படியாக குப்பைத் தொட்டிகளை குறைக்க முயற்சி எடுக்கப்பட்டு, முதல் முயற்சியாக 20 குப்பைத் தொட்டிகள் அகற்றப்பட்டது.

2016–17ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட விடாமுயற்சி மற்றும் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக படிப்படியாக குப்பைத்தொட்டிகள் குறைக்கப்பட்டு, 2019ம் ஆண்டு மே மாதம் இறுதியில் அனைத்து குப்பைத் தொட்டிகளும் அகற்றப்பட்டு, மணலி மண்டலம் குப்பையில்லா மண்டலமாக (Zero Waste Garbage) முதல்முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (Zero Waste Garbage என்பது உற்பத்தி செய்யப்படும் அனைத்து ரக குப்பைகளும் தரம் பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பை, மக்கா குப்பை மற்றும் இதர வகையென தரம் பிரிக்கப்பட்டு எம்.எம்.சி. மற்றும் ஆர்.ஆர்.சிக்கு அனுப்பப்படுகிறது.)

தற்பொழுது துப்புரவு பணியாளர்களை கொண்டு, வீடுவீடாக மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் பேட்டரி வாகனங்கள் மூலம் பெறப்படும் குப்பைகள் 100 சதவீதம் மக்கும் குப்பை, மக்காத குப்பை என சேகரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு தரம் பிரித்து வழங்காமல் கொடுக்கப்படும் வீடுகளுக்கு குப்பையை தரம் பிரிக்கும் அவசியத்தை எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு சேகரமாகும் குப்பைகளில் மக்கும் குப்பை, மக்காத குப்பை (Saleable item), Inert (Shoe, Bag, Tyre, Bed Pillows and etc.) மற்றும் மக்காத நெகிழி குப்பை (Poly cover below 40 microns) என தரம் பிரிக்கப்படுகிறது. இதில் மக்காத குப்பைகளான காகிதம், நெகிழி, மற்றும் இதர குப்பைகள் அந்தந்த வார்டில் உள்ள RRC-ல் பிரித்தனுப்பப்படுகிறது. மேலும்,

கார்டு போர்டுகள், கண்ணாடி பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் போன்ற மக்காத குப்பைகள் பணியாளர்களாலேயே விற்பனையாளரிடம் விற்கப்படுகிறது. தொடர்ந்து, Inert எனப்படும் குப்பைகளை எரித்து சாம்பலாக்கும் இயந்திரத்தை (Incineration Plant) நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி, மணலி மண்டலத்தில் உள்ள 22 பூங்காக்களில் 24 எண்ணிக்கையில் மூங்கில் தொட்டிகள், 5 சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் 22 உரக்கிணறுகள் மற்றும் மண்குழிகள் அமைக்கப்பட்டு, அங்கு சேகரிக்கப்படும் இலை, பூ மற்றும் இதர மக்கும் குப்பைகள் அத்தொட்டிகளிலேயே கொட்டப்பட்டு, அவை உரமாக மாற்றப்பட்டு பூங்காக்களில் பயன்படுத்தப்படுகிறது. மேலும், மீதமுள்ள உரங்கள் பொதுமக்கள் கூடுமிடங்களில் விற்பனை செய்யப்பட்டு, அதில் ஈட்டப்படும் தொகை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. துப்புரவு தொழிலாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக இத்தொகையினை அவர்களுக்கே வழங்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆணைக்கிணங்க, மணலி மண்டலத்தில் மேலும் கூடுதலான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில் உரக்கிணறுகள், சின்டக்ஸ் தொட்டிகள், மண்குழிகள் மற்றும் மூங்கில் தொட்டிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மணலி மண்டலம் குப்பையில்லா மண்டலமாக மாற்றப்பட்டதனால் 251 எண்ணிக்கையுள்ள குப்பைத் தொட்டிகள், 3 இலகுரக காம்பெக்டர் லாரிகள் மற்றும் 2 கனரக லாரிகள் தினசரி குப்பை அகற்றும் பணியிலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டு, இவ்வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒரு மாதத்திற்கு சுமார் ரூ.8 இலட்சம் வரை செலவினங்கள் குறைக்கப்பட்டு சேமிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் மூலமாக சுற்றுச்சூழல் பாதிப்பின்றி, சேகரிக்கப்படும் குப்பைகள் அனைத்தும் உரமாகவும், மறுசுழற்சியும் செய்யப்படுகிறது. மேலும், சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த குப்பைத் தொட்டிகள் அகற்றப்பட்டதுடன், குப்பைகளால் ஏற்படும் துர்நாற்றம் முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் மணலி மண்டலம் முதல் குப்பையில்லா மண்டலமாக மாற்றப்பட்டுள்ளது என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**